மதுரை மாவட்டம் சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட அலங்காநல்லூர் ஒன்றியப் பகுதிகளில் வலையபட்டி ஊராட்சிக்குட்பட்ட மஞ்சமலை கோவில் செக்குமடை அருகில் புதிதாக அமைக்கப்பட்ட உணவு கூடம், சேந்தமங்கலம் ஊராட்சியில் புதிதாக அமைக்கப்பட்ட பாலம், பாரைப்பட்டி ஊராட்சியில் புதிய நியாயவிலைக் கடை உள்ளிட்ட ரூபாய் 4.52 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப்பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் சங்கீதா, கூடுதல் ஆட்சியர் மோனிகா ரானா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் குருமூர்த்தி, உள்ளாட்சி பிரதிநிதிகள் பஞ்சு, விஜயலட்சுமி முத்தையன், ரேணுகாஈஸ்வரி கோவிந்தராஜ், ஜெயராமன், கழக நிர்வாகிகள் பாலசுப்பிரமணியன், தன்ராஜ், பரந்தாமன், பொதும்பு தனசேகர், ரகுபதி, சத்தியபிரகாஷ் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், அதிகாரிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.

உலகத் தமிழர்கள் வாழும் 100 முக்கிய நகரங்களில்

தமிழர்களுக்கான பிரத்யேக பொருளாதார மையம்!

மலேசியாவில் நடைபெற்ற உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டில் தீர்மானம்!

கோலாலம்பூர், நவ. 20 - உலகத் தமிழர்கள் வாழும் 100 முக்கிய நகரங்களில் தமிழர்களுக்கான பிரத்யேக பொருளாதார மையம், தமிழர் தொழில் தொடங்க நிதியுதவி வழங்குவதை ஊக்குவிக்கும் நோக்கில் வங்கிகளை நிறுவ வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் மலேசியாவில் நடைபெற்ற உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டில் ஞாயிற்றுக்கிழமை நிறைவேற்றப்பட்டன.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கிய 11ஆவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்தது. வர்த்தகம், தொழில் மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு வளர்ச்சி மற்றும் சவால்கள், இந்திய மருத்துவம் மற்றும் பாரம்பரிய மருத்துவ சிறப்புகள் உள்ளிட்டதலைப்புகளின்கீழ் நடைபெற்ற அமர்வில் பங்கேற்றவர்களை மாநாட் டின் நிறுவனத் தலைவர் வி.ஆர். எஸ். சம்பத் அறிமுகப்படுத்தி நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

சிவ மூப்பனார் (சிகாகோ). மலேசியாவின் டான்ஸ்ரீ முகம்மது இக்பால் ராவுத்தர். பேராசிரியர் டத்தோ டாக்டர் டெனிசன் ஜெயசூர்யா, பத்திரிகையாளர் சரஸ்வதி சின்னசாமி, இந்திய பாரம்பரிய மருத்துவகவுன்சிலின் முன்னாள் தலைவர் வனிதா முரளிகுமார் (இந்தியா), மருத்துவ உப கரணங்கள் ஏற்றுமதியாளர் ஜான் ஜோசஃப் (நியூயார்க்), மத்திய தனியார் சட்டப் பல்கலைக்கழகத் தலைவரும் வழக்குரைஞருமான டி. சரவணன் (சேலம்), தொழிலதி பர் வி.ஜி.சந்தோஷம் (சென்னை), காசி முத்து மாணிக்கம், டெம்பிள் ஃபெடரேஷனின் குமார செங்கன் (மோரீஷஸ்), லோகி நாயுடு (தென்னாப்பிரிக்கா) உள்ளிட்டோர் பேசினர். முன்னாள் தூதர் மகாலிங்கம், மலேசிய முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் டான்ஸ்ரீ டத்தோ எஸ். சுப்பிரமணியம் உள்ளிட்டோர் அமர்வுகளுக்குத் தலைமை தாங்கினர்.

தீர்மானங்கள்: நிறைவு விழாவில் நிறைவேற்ற ப்பட்ட தீர்மானங்களின் சுருக்கம் வருமாறு: தமிழர்கள் வாழும் டர்பன் சென்னைக்கு விமான சேவை, மோரீஷஸ்சென்னை விமான சேவையை ஒன்றில் இருந்து மூன்றாக அதிகரிப்பது, சென்னை மியான்மர் வாரமிருமுறை சேவையை தினமும் இயக்குவது, வாரம் ஒருமுறை லண்டன் சென்னை விமான சேவையை இரண்டாக அதிகரிப்பது, நியூ யார்க் சென்னை மற்றும் மோரீஷஸ் அருகிலுள்ள ரீயூனியன்தீவுகள்சென்னைக்கு நேரடி விமான சேவையை இந்திய அரசும் சம்பந் தப்பட்ட நாடுகளின் அரசுகளும் வழங்க வலியுறுத்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழர் அதிகம் வாழும் 100 உலக நகரங்களில் உலகத் தமிழர் பொருளாதார மையம், தமிழை ஐ.நா.வில் அலுவல் மொழியாக்க இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மோரீஷஸ், தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் மூலம் நடவடிக்கை, உலகத் தமிழர்களுக்‘கென வர்த்தக சபை மற்றும் தமிழர்களுக்கு தொழில் கடன் வழங் கும் நோக்குடன் உலக அளவில் வங்கிகளை நிறுவுவது, தமிழகத்தில் உலகத் தமிழர் மையத்துக்காக ஐந்து ஏக்கர் நிலமும் ஒரு கோடி ரூபாய் நிதியுதவியும் வழங்க தமிழக அரசை கேட்டுக்கொள்வது, தமிழகத்தில் ஒரு ட்ரில்லியன் முதலீட்டு இலக்கை நிர்ணயித்துள்ள தமிழக அரசுக்கு உறுதுணையாக இருப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விருதுகள்: இதைத் தொடர்ந்து, தமிழர்களின் தொழில்முனைவுத் திறன்களை ஊக்குவிக்கும் தமிழர்களுக்கு உலகத் தமிழர் மாமணி விருதை மலேசிய உச்சநீதிமன்ற 5 நீதிபதி டத்தோ வசீர் ஆலம் வழங்கினார். அவர்களின் விவரம் வருமாறு:

டாக்டர் அன்சாரி வாஹித் (அபு தாபி); டாக்டர் பழனிவேல் (சிங்கப்பூர்); குமார செங்கன் (மோரீஷஸ்); கல்வியாளர் டாக்டர் எஸ். பீட்டர் (சென்னை), மத்திய சட்ட (தனியார்) பல்கலைக் கழகத் தலைவர் டி. சரவணன் (சேலம்); தொழில்முனைவோர் டாக்டர் அப்துல் பாசித் சையத் (லண்டன்). புதிதாக பட்டுள்ள தமிழர் ஊக்குவிப்பு அமைப்புக்கான விருது, சிகாகோ வில் உள்ள தமிழ்நாடு ஃபவுண்டேஷன் என்ற தொண்டு அமைப்புக்கு வழங்கப்பட்டது. அதன் நிர்வாகிகள் வீரா. வேணுகோபால், சிவ மூப்பனார் ஆகியோர் விருதைப் பெற்றுக் கொண்டனர். அறிமுகப்படுத்தப் மாநாட்டுக் குழுத் தலைவர் ப. சகாதேவன், முபாரக், டான்ஸ்ரீ மாரிமுத்து, ஆடிட்டர் நாகராஜன், மலேசிய தூதரக அதிகாரி விவேகா னந்தன், டர் பன் முன்னாள் துணை மேயர் லோகி நாயுடு, சென்னை உயர் நீதிமன்ற மூத்த வழக்குரைஞர் தியாகராஜன், சென்னை பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் வி.பி. மாதேஸ்வரன் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்திய அரசியல் சாசனத்தை அடிப்படையாகக் கொண்டு

நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் கூட்டாட்சி முறையில் அமைந்திட வேண்டும்!

“தீக்கதிர்” நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, நவ. 20 - இந்திய அரசியல் சாசனத்தை அடிப்படையாகக் கொண்டு நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் கூட்டாட்சி முறையில் அமைந்திட வேண்டும் என “தீக்கதிர்” நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

அது வருமாறு:

ஒன்றிய அரசின் 16ஆவது நிதி ஆணையக் குழுவினர் நான்கு நாள் பயணமாக தமிழ்நாடு வந்துள்ளனர். அரவிந்த் பனகாரியா தலைமையிலான இந்தக் குழுவை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து தமிழக அரசு சார்பிலான கருத்துக்களை முன் வைத்துள்ளார். தற்போதைய வரி பகிர்வு முறை தமிழ்நாடு போன்ற முன்னேறிய மாநிலங்களை தண்டிப்பது போல் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

15ஆவது நிதிக்குழு வரிப் பகிர்வில் மாநிலங்களின்

தீக்கதிர்

2024 நவ.19 செவ்வாய்க்கிழமை

நிதி வழங்கட்டும் நிதி ஆணையம்

ஒன்றிய அரசின் 16ஆவது நிதி ஆணையக் குழுவினர் நான்கு நாள் பயணமாக தமிழ்நாடு வந்துள்ளனர். அரவிந்த் பனகாரியா தலைமையிலான இந்தக் குழுவை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்தித்து தமிழக அரசு சார்பிலான கருத்துக்களை முன் வைத்துள்ளார். தற்போதைய வரி பகிர்வு முறை தமிழ்நாடு போன்ற முன்னேறிய மாநிலங்களை தண்டிப்பது போல் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

பங்கை 41 சதவீதமாக உயர்த்தியது பொருத்தமானது என்ற போதும் இந்த அறிவிப்புக்கு மாறாக தமிழ்நாட்டிற்கு 33.16 சதவீதம் மட்டுமே கிடை த்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். பேரிடர் துயர் துடைப்புப் பணிக்காக உரிய நிதியை ஒன்றிய அரசு வழங்க வேண்டும் என நிதி ஆணையம் பரிந்துரைக்க வேண்டும் என்றும் முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார். தமிழ் நாட்டிற்கு தொடர்ந்து இழைக்கப்பட்டு வரும் அநீதியை நிதி ஆணையம் சரி செய்ய வேண்டும் என்றும் அவர் குறிப் பிட்டுள்ளது முற்றிலும் நியாயமானது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நிதி ஆணையத்திடம் பல்வேறு கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளன. பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளதால் மாநில அரசுகளின் செலவு அதிகரித்துக் கொண்டே போவதை சுட்டிக்காட்டி யுள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு, கேரளம் போன்று சிறப்பா கச் செயல்பட்டு சாதனை படைக்கும் மாநிலங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். ஆனால் ஊக்க மளித்தலின் வரையறையை ஒன்றிய அரசு தீர்மானிப்பது என்பது பொருத்தமற்றது; மாநில உரிமைகளைப் புறந்தள்ளுவது என கூறப்ப ட்டுள்ளது.

ஜிஎஸ்டி வரி விதிப்பு முறையால் மாநிலங்களுக்கு நெருக்கடி அதிகரித்துக் கொண்டே செல்கிறது. மாநிலங்களின் வரி வருவாயில் சுமார் 45 சதவீதம் ஜி.எஸ்.டி. வரம்புக்குள் கொண்டுவரப் பட்டுள்ளது என்பதையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக்காட்டி யுள்ளது.

மாநில அரசுகள் கடன் வாங்குவதற்கு பல்வேறு நிபந்தனைகளை நிதி ஆணையம் வகுத்துள்ளது பொருத்தமற்றது என்பதை மார்க்சி ஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக்காட்டி யுள்ளது.

மொத்த வரி வசூலில் மாநிலங்களின் பங்கு குறைந்த பட்சம் 50சதவீதம் அளவுக்கு உயர்த்தப் பட வேண்டும் என்பதை தமிழக முதல்வர் வலியுறுத்தியுள்ளார். இதே கோரிக்கையை மார்க்சி ஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் அழுத்த மாக வற்புறுத்தியுள்ளது குறிப்பி டத்தக்கது.

வளர்ச்சி குறைந்த மாநிலங்களுக்கு கூடுதல் நிதி என்பது நியாயமான ஒன்று. ஆனால் அது தமிழ்நாடு, கேரளம் போன்ற வளர்ச்சியடைந்த மாநிலங்களுக்கு தண்டனையாக அமைந்துவிடாமல் ஒன்றிய அரசு அதற்கான தொகையை அளித்திட வேண்டும். நம்முடைய அரசியல் சாசனம் கூட்டாட்சி முறையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நிதி ஆணையத்தின் பரிந்துரைகளும் அதனடிப்படையில் அமைந்திட வேண்டும்.

இவ்வாறு அத் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை யில் நடைபெற்ற நகர் கழக நிர்வாகிகள் கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கே.எம்.பொற்கோ உரையாற்றினார். உடன் நகர் கழக செயலாளர் க.பொன்னுச்சாமி மற்றும் நிர்வாகிகள் உள்ளார்கள்.

கீழ்பென்னாத்தூர் வடக்கு ஒன்றியம் , பேரூரில் - இன்று

சி.என்.அண்ணாதுரை எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி கூறுகிறார்!

பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமையில்!

திருவண்ணாமலை, நவ. 20 - பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமையில்திருவண்ணாமலை நாடாளுமன்றத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை இன்று (20.11.2024) காலை 9 மணிக்குத் தொடங்கி மாலைவரை கீழ்பென்னாத்தூர் வடக்கு ஒன்றியம், பேரூர்களில் வாக்காளர்களை சந்தித்து நன்றி தெரிவிக்கிறார்.

கீழ்பென்னாத்தூர் வடக்கு ஒன்றியம் ஆராஞ்சி தொடர்ந்து ஆராஞ்சி காலனி, சோமாசிபாடி, சோமாசிபாடி காலனி, கடம்பை, கடம்பை காலனி,சோ.நம்மியந்தல், ஐங்குணம், காணலாபாடி காலனி, காணலாபாடி . கழிக்குளம், கழிக்குளம் காலனி, கனபாபுரம், வழுதலங்குணம், மேக்களூர், மேக்களூர், செவரப்பூண்டி, கீக்களூர், கீக்களூர் காலனி, சுத்தாழம்பட்டு கத்தாழம்பட்டு காலனியில் பிற்பகல் நிறைவு செய்கிறார்.

அதனைத் தொடர்ந்து மாலை 3.30 மணிக்கு கல்பூண்டியில் தொடங்கி, கீழ்பென்னாத்தூர் காலனி, கீழ்பென்னாத்தூர், கருங்காலிக்குப்பம், கருங்காலிக்குப்பம் காலனி, இராயம்பேட்டை சிறு நாத்தூர் , நாரிமங்கலம் அடிப்படை, கார்ணாம்பூண்டி காலனி, வேடநத்தம், வேடநத்தம் காலனி, கரிக்கலாம்பாடி, கரிக்கலாம்பாடி காலனி, கணியாம்பூண்டியில் 6.30 மணிக்கு வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து நிகழ்ச்சியை நிறைவு செய்கிறார்.

இந் நிகழ்ச்சிக்கு பேரவைத் துணைத்தலைவர் கு.பிச்சாண்டி தலைமை வகிக்க வாக்காளர்களுக்கு சி.என்.அண்ணாதுரை நன்றி கூறுகிறார்.

இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி பள்ளத்தூர், கானாடுகாத்தான் பேரூராட்சி பாகமுகவர்கள் இளைஞரணி கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பரணிக்கிட்டு ஆகியோர் சிறப்புரை ஆற்றினார் கள். இந்த கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் கே.எஸ்.ஆனந்த், பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி ராதிகா,பேரூர் கழக செயலாளர் அசோக் மற்றும் பாகமுகவர்கள் கலந்து கொண்டார்கள்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எவரெஸ்ட் மு. கணேசன்

நவம்பர் 20 (2011)

பள்ளி பருவத்திலேயே இந்தி திணிப்பை எதிர்த்து போராட்டத்தில் கலந்து கொண்டவர்.

தி.மு.க. இளைஞர் அணி துவங்கிய நாளிலிருந்து இளைஞர் அணியின் வளர்ச்சிக்கு பணியாற்றிய அவர், ஈரோடு மாவட்டத்தின் முதல் இளைஞர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்டதோடு, தொடர்ந்து மூன்று முறை அப்பொறுப்பை வகித்தவர்.

தி.மு.க. இளைஞர் அணி மாநில துணைச் செயலாளராகவும் பணியாற்றியவர். 1989ஆம் ஆண்டு கழக அரசின் சாதனை விளக்க இளைஞர் அணி பேரணியில் சிறப்பாக பணியாற்றியமைக்காக தலைவர் கலைஞர் அவர்களிடம் விருது பெற்றார்.

ஈரோடு மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் இளைஞர் அணி கிளையை அமைத்தவர். கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

நெல்லை மாநகர

வழக்கறிஞர் அணி கூட்டம்!

சு.சுப்பிரமணியன் தலைமை!

நெல்லை, நவ. 20 - நெல்லை மாநகர தி.மு.க அலுவலகத்தில் மாநகர வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் அவசர ஆலோசனை கூட்டம் மாநகர செயலாளர் சு.சுப்ரமணியன் தலைமையில் துணைச் செயலாளர் அப்துல் கையூம், பகுதிச் செயலாளர்கள் நமச்சிவாயம் (நெல்லை) அன்டன் செல்லத்துரை (பாளை) மாநகர வழக்கறிஞரணி அமைப்பாளர் சுரேஷ்குமார், வழக்கறிஞரணி தலைவர் முன்னிலையில் நடைபெற்றது.

முதலமைச்சர், கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதல மைச்சர்,கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக முதன்மை செயலாளர்,நகராட்சி நிர்வாக துறை அமைச்சரும், நெல்லை மாவட்டப் பொறுப்பு அமைச்சருமான கே.என். நேரு அறிவுறுத்தலின்படியும்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் ஆலோசனை யின்படி நெல்லை மாநகர தி.மு.க. வழக்கறிஞர் அணி அவசர ஆலோசனை கூட்டம் மாநகர தி.மு.க. அலுவலகத்தில் மாநகர செயலாளர் சு.சுப் பிரமணியன் தலைமையில் நடைபெற்று.

இந்நிகழ்வில் மாநகர வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்கள் கார்த்திக் தம்பான்,சண்முக சுந்தர், சங்கர் கணேஷ், மாவட்டப் பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ், வட்டச் செயலாளர் கேபிள் குமரேசன், வழக்கறிஞர்கள் ஜெயபிரபா, செந்தில், பரமசிவன், தாமிரா கணேசன், பீர்ஷா, அம்பேத் பிரபாகரன், புலித்துரை, மாநகர அயலக அணி துணை அமைப்பாளர் அந்தோணிராஜ், பீர்ஷா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் வழக்கறிஞர் சுபாஷ் நன்றியுரையாற்றினார்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

1.2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு மாநில வழக்கறிஞர் அணி சார்பில் வழங்கப்படும் பணிகளை உடனடியாக மேற்கொள்வது.

2.2026 சட்டமன்றத் தேர்தலைப் முன்னிட்டு மற்ற மாவட்டங்களில் பாக முகவர்களின் பணிகளை ஆய்வு செய்ய,செய்வதற்காக தயார் நிலையில் அணி நிர்வாகிகளை ஒருங்கிணைப்பது.

3.துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவித்து, அவர்களின் பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடுவது என்றும்.

இவ்வாறுதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கவிஞர் பொன்னிவளவன்

நவம்பர் 20 (1998)



தி.மு.க. இலக்கிய அணியின் தலைவராக பணியாற்றியவர்.

“கவியரங்குகள் பலவற்றில் பொன்னிவளவன் பாடிய கவிதைகள் எப்போதும் தன்மானத் தமிழர்களின் செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கும். சாகாத கவிஞர்களின் வரிசையிலே இணைந்துவிட்ட அந்த உடன்பிறப்பை கழகமும், கழகக் கண்மணிகளும் என்றும் மறந்திட இயலாது” என தலைவர் கலைஞரால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தூத்துக்குடி நீதிமன்றத்தில் சட்ட எரிப்பு வழக்கில் நீதிபதி முன்னர் கவிதை வாக்குமூலம் தந்து கடுங்காவல் தண்டனை பெற்றவர்.

நெருக்கடி காலத்தில் ஓராண்டு சிறைவாசம் இருந்தவர்.

தலைமைக் கழகச் சார்பில் “கலைஞர் விருது” பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.